பக்கங்கள் 14

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஐப்பசி 03 சனிக்கிழமை 21.10.2023 அதிர்வு 82

## டயனா கமகே விவகாரம்: விசாரணைகள் ஆரம்பம்



நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது எனக் கூறப்படும்மோதல்சம்பவம்தொடர்பில் இராஜாங்க அமைச்சர் டயனா கமகே,

04

# யாழ். போதனா வைத்தியசாலை படுகொலையின் நினைவேந்தல்





- எஸ்.நிதர்ஷன் -

இந்திய இராணுவத்தால் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் படுகொலை செய்யப்பட்டோரின் 36 ஆம் ஆண்டு நினைவேந்தல் இன்று அனுஷ்டிக்கப்பட்டது.

கடந்த 21.10.1987 ஆம் ஆண்டு யாழ். போதனா வைத்தியசாலைக்குள் நுழைந்த இந்திய இராணுவத்தினர் அங்கு கடமையில் ஈடுபட்டிருந்த 21 பேரைச் சுட்டுப் படுகொலை செய்திருந்தனர்.

04


### பயங்கரவாதம் என்ற பெயரில்

# இலங்கையில் நடந்ததைப் போல் காஸாவிலும் இனப்படுகொலை!

### கஜேந்திரகுமார் எம்.பி. சுட்டிக்காட்டு







- சுடர் திலீபன் -

“இலங்கையில் இருந்து காஸாவில் போர் நிறுத்தத்தைக் கோருவது ஆச்சரியமாக இருக்கின்றது. பயங்கரவாதம் என்ற பெயரில் இனப் படுகொலையே அங்கு நடக்கின்றது. 15 வருடங்களுக்கு முன்னர் இப்போது காஸாவில் நடப்பதைப் போன்று இலங்கையில் நடந்தது.”

04

## பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சூட்டுக் காயங்களுடன் சடலமாக மீட்பு



பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

எஹலியகொட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியே தனது உத்தியோகபூர்வ இல்லத்துக்குள் இருந்து துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இன்று அதிகாலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தற்கொலையா

04

## ஓய்வுபெற்ற கிராம அலுவலர் சுட்டுக்கொலை!

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் இருவர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஓய்வுபெற்ற கிராம அலுவலர் ஒருவர் சாவடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் கம்பஹா மாவட்டம், அத்தனகல்லை பிரதேசத்தில்

04



# கிளைமோர் குண்டுகள் மீட்பு!

தென்மராட்சி – சாவகச்சேரி பிரதேசத்தில் கிளைமோர் குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன என்று சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இரு கிளைமோர் குண்டுகளும் சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மட்டுவில் பகுதியில் பன்றித்தலைச்சி அம்மன் கோவிலுக்கும் பொருளாதார மத்திய நிலையத்துக்கும் இடைப்பட்ட பகுதியில் வீதியில் இருந்து சுமார் 15 மீற்றர் தொலைவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பழைய இரும்புகளைச் சேகரிக்கும் வியாபாரி ஒருவர் வழங்கிய தகவலின் அடிப்படையில் அந்த இடத்துக்கு விரைந்த சாவகச்சேரி பொலிஸார் அந்த இடத்தை பார்வையிட்டுள்ளனர்.

கிளைமோர் குண்டுகளை மீட்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். இது தொடர்பிலான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# அமெரிக்காவின் விஞ்ஞானிகள் தரவரிசையில் 38 இலங்கையர்

## இரண்டு பேர் யாழ். பல்கலைக் கழகத்தைச் சேர்ந்தவர்கள்




அமெரிக்காவின் ஸ்டான்போர்ட் பல்கலைக்கழகமும் Elsevier நிறுவனமும் இணைந்து வெளியிட்டுள்ள உலகின் சிறந்த 2 வீத விஞ்ஞானிகளின் தரவரிசையில் முப்பத்தெட்டு இலங்கை விஞ்ஞானிகளும் ஆய்வாளர்களும் இடம்பெற்றுள்ளனர்.

இந்தப் பட்டியலில் இலங்கையில் இருந்து உள்ளடக்கப்பட்டிருப்போரில் யாழ்.பல்கலைக் கழகத்தைச் சேர்ந்தவர்களான பேராசிரியர் நவரட்ணராஜா சதிபரன், கலாநிதி ரி.மதனரஞ்சன் ஆகிய இருவரும் இடம் பெற்றிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

பணி நாள் மற்றும் வருடாந்த அடிப்படையில் விஞ்ஞானிகளைப் பல்வேறு காரணிகளைக் கொண்டு தரவரிசைப்படுத்தி இந்தப் பட்டியல்கள் வெளியிடப்பட்டு வருகின்றன.

22 அறிவியல் துறைகள் மற்றும் 176 துணைத்துறைகளில் இருந்து விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பட்டியலில் இணைக்கப்படுகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.




# உட்கட்டமைப்பு வசதிகள் எதுவுமின்றி பலாலி சர்வதேச விமான நிலையம்!

பலாலி சர்வதேச விமான நிலையம் செயற்பட ஆரம்பித்து நான்கு வருடங்கள் கடந்துள்ள போதிலும் உட்கட்டமைப்பு வசதிகள், அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்படவில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

பலாலி சர்வதேச விமான நிலையம் ஊடாக இந்தியா மற்றும் கொழும்பு இடையேயான பயணிகள் சேவைகள் இடம்பெற்று வருகிறது. அத்துடன் பெருமளவானவர்கள் அதனை பயன்படுத்தி வருகின்றனர்.

தற்போதைய விமான நிலையத்தில் விமானம் ஊடாக வருபவர்களை அழைத்து வர செல்பவர்கள் காத்திருப்பதற்கான இடம் மர நிழலேயாகும்.

மரங்களுக்கு கீழ் கல்லாசனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கோடை காலத்தில் அவை பாதிப்பை ஏற்படுத்தாது. ஆனால் மழை பெய்தால் கல்லாசனங்களில் இருக்க முடியாது பெரும் சிரமத்துக்கு ஆளாகின்றனர்.

பயணிகள் குடிவரவு, குடியகல்வு செயற்பாடுகளை முடித்து விட்டு காத்திருப்புக்கான போதிய இடம் இல்லாமல் அவர்களும் இதே பிரச்சினையை முகம் கொடுக்கின்றனர்.

தற்போது மாரி காலம் ஆரம்பித்துள்ள நிலையில் விமான நிலையத்தை பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

இவ்வாறான நிலையில் ஒரு சில உட்கட்டுமான அடிப்படை வசதிகளையாவது ஏற்படுத்துவது பயணிகள் மற்றும் விமான நிலையத்துக்கு வருபவர்களுக்கு சௌகரியத்தை ஏற்படுத்தும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த விடயம் தொடர்பில் உள்ளூர் அரசியல்வாதிகள் முதல் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு, விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் நிறுவனம், இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகார சபை ஆகியோர் கவனத்தில் கொள்வது அவசியமாகும்.



# ஆயிரத்து 135 தொழு நோயாளர்கள் ஒரு வருடத்தில் இனங்காணப்பட்டனர்

ஒரு வருடத்தில் ஆயிரத்து 135 தொழுநோயாளிகள் கண்டறியப்பட்டுள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

செப்ரெம்பர் மாதத்தில் மட்டும் 175 தொழுநோயாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொழுநோய் தடுப்புப் பிரிவுப் பணிப்பாளர் டாக்டர் பிரசாத் ரணவீர குறிப்பிட்டுள்ளார்.

புதிய நோயாளர்களை அடையாளம் காண, அதிக நோயாளர்கள் பதிவாகும் பகுதிகளை வரைபடமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று நிபுணர் பிரசாத் ரணவீர குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் தொழுநோயாளர்களில் 10 வீதமானோர் 14 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் என்று சுகாதார அமைச்சின் தொழுநோய் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

தொழுநோயைக் கட்டுப்படுத்தும் நாட்டில் சிறுவர் தொழுநோயாளர்களின் எண்ணிக்கை 4 வீதத்துக்கும் குறைவாகக் காணப்பட வேண்டும் என்று அந்த பிரிவின் விசேட வைத்திய நிபுணர் பிரசாத் ரணவீர குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஆண்டின் முதல் 9 மாதங்களில் 1155 தொழுநோயாளர்கள் நாட்டில் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதில் 10வீதமான தொழுநோயாளிகள் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளாக உள்ளனர். இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதில் புதிய முயற்சிகள் அவசியம் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**பொலிஸ் நிலைய...**

அல்லது கொலையா என்பது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

**டயானா கமகே...**

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ரோஹன பண்டார மற்றும் சுஜித் சஞ்ஜய பெரேரா ஆகியோரால் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாடுகளுக்கு அமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று வெலிக்கடை பொலிஸ் நிலையம் தெரிவித்துள்ளது.

இராஜாங்க அமைச்சர் டயனா கமகே வெலிக்கடை பொலிஸ் நிலையத்திலும், நாடாளுமன்ற உறுப்பினர்களான ரோஹன பண்டாரவும், சுஜித் சஞ்ஜய பெரேராவும் மிரிஹான பொலிஸ் நிலையத்திலும் தங்களது முறைப்பாட்டை அளித்துள்ளனர்.

எனினும், இந்த மோதல் சம்பவம் வெலிக்கடை பொலிஸ் நிலையத்துக் குட்பட்ட பகுதியில் இடம்பெற்றுள்ளமையால் முறைப்பாடுகள் வெலிக்கடை பொலிஸ் நிலையத்துக்கு மாற்றப்பட்டுள்ளன.

அதன்படி, வெலிக்கடை பொலிஸ் நிலையம், நாடாளுமன்ற பொலிஸ் நிலையத்துடன் இணைந்து விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக வெலிக்கடை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் தாக்குலுக்குள்ளானார் என்று தெரிவித்த இராஜாங்க அமைச்சர் டயனா கமகே, ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சில மணித்தியாலங்களின் பின்னர் அங்கிருந்து வெளியேறினார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சுஜித் சஞ்ஜய பெரேரா நாடாளுமன்றத்தில் உள்ள நூலகத்துக்கு அருகில் வைத்து தம் மீது தாக்குதல் நடத்தினார் என்று இராஜாங்க அமைச்சர் டயனா கமகே நேற்று நாடாளுமன்றில் உரையாற்றும்போது தெரிவித்திருந்தார்.

**ஓய்வுபெற்ற...**

நேற்றிரவு இடம்பெற்றுள்ளது.

நான்கு பிள்ளைகளின் தந்தையான விக்கிரமபாகு அமலரட்ன (வயது 64) என்பவரே இவ்வாறு சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

துப்பாக்கிதாரிகள் தப்பிச் சென்றுள்ள நிலையில், அவர்களைக் கைது செய்வதற்கான விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

காணிப் பிரச்சினை காரணமாக உயிரிழந்த நபருக்கும் பிரதேசத்தில் உள்ள ஒரு குடும்பத்தினருக்கும் இடையில் அண்மையில் கைலப்பு இடம்பெற்றுள்ளது என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

**இலங்கையில்...**

– இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற இஸ்ரேல் – பலஸ்தீன மோதல் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"யூதர்களுக்கு அவர்களின் நாட்டைக் கொடுக்க வேண்டும். அவர்கள் சமாதானமாக வாழ வேண்டும். அதேபோன்று பலஸ்தீனத்துக்கும் அநீதி ஏற்பட்டுள்ளது. அங்கே விட்டுக்கொடுப்பு ஏற்பட்டிருந்தது.

இந்த விட்டுக்கொடுப்பில் பலஸ்தீன மக்கள் அதிகமாக அதனைச் செய்ததை மறுக்க முடியாது. யூதர்களின் நாடு அந்த உடன்படிக்கைகளுக்கு இணங்கி நடந்திருக்க வேண்டும். அவர்களுக்கு சொந்தமான நாடு கிடைக்கும் போது, அந்த நாட்டைச் சரியான முறையில் நடத்தக்கூடிய முறையிலேயே அது அமைய வேண்டும்.

நாங்கள் பிழையைப் பிழையென்று நேர்மையாகக் கூற வேண்டும். அதற்கும் மேலாக சென்றுவிட்டது. பயங்கரவாதம் என்ற பெயரில் இனப் படுகொலைகளே நடக்கின்றன. மக்களின் உணவு, மருந்துவம், நீர் வசதிகள் மறுக்கப்படுவதன் நோக்கம் என்ன?

அந்த மக்கள் தொகையை அழிக்கும் செயற்பாடே நடக்கின்றன. அங்குள்ள மக்கள் இலக்கு வைக்கப்படுகின்றனர். மக்களைக் குறிப்பிட்ட இடத்துக்குப் புகலிடம் தேடிச் செல்லுமாறு கூறும் போது அவர்கள் அவ்வாறு செல்லும் போது அவர்கள் நோக்கி தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன.

எவ்வாறாயினும் பிரச்சினைகளுக்கான அடிப்படைக் காரணங்கள் உள்ளன. அவற்றைக் கண்டறிய வேண்டும். எதிர்கால பலஸ்தீன நாட்டை அழிப்பதாகவே அமையும். 15 வருடங்களுக்கு முன்னர் இப்போது காஸாவில் நடப்பதைப் போன்று இலங்கையில் நடந்தது.

வடக்கு, கிழக்கில் பாதுகாப்பு வலயங்கள் பிரகடனப்படுத்தப்பட்டதுடன் அவற்றின் மீது குண்டுகள் வீசப்பட்டன. வைத்தியசாலைகள் மீது குண்டுகள் வீசப்பட்டன. அதேபோன்று 15 வருடங்களின் பின்னர் இப்போது நடக்கும் போது அதன் தவறுகளைப் புரிகின்றனர். இப்போது போர் நிறுத்தம் தொடர்பில் கதைக்கின்றனர். இது தொடர்பில் நாம் ஆச்சரியமடைகின்றோம்.

தமிழ் மக்கள் எந்தத் தரப்பினரைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் நாங்கள் இஸ்ரேல் என்ற அரசுக்கு எதிரானவர்கள் அல்லர். அவர்கள் சமாதானமாக வாழ வேண்டும்.

அதேபோன்றே இலங்கையிலும் சிங்கள மக்களும் சமாதானமாக இருக்க வேண்டும். இதனால் இந்த நாடாளுமன்றத்தில் இருப்பவர்கள் மத்திய கிழக்கில் உள்ள நிலைமைகள் தொடர்பில் ஆராய்ந்து தமக்கென பாடத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும்." – என்றார்.

**யாழ. போதனா...**

இவ்வாறு படுகொலை செய்யப்பட்டவர்களின் 36ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு யாழ். போதனா வைத்தியசாலைப் பணியாளர்களின் ஏற்பாட்டில் வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தலைமையில் இன்று வைத்தியசாலையில் நடைபெற்றது.

இதன்போது படுகொலை செய்யப்பட்டவர்களுக்கான பொதுச்சுடரை வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளரும் யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளருமான த.சத்தியமூர்த்தி ஏற்றிவைத்தார்.

இதையடுத்து உயிர்நீத்தவர்களின் உறவினர்களும் தமது உறவுகளை நினைவேந்தி சுடரேற்றியதைத் தொடர்ந்து நினைவுப் படங்களுக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் வைத்தியசாலைப் பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர்கள், வைத்தியர்கள், தாதியர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.









# வடக்குக்கான ரயில் சேவை நேர அட்டவணை மாற்றம்!

வடக்குக்கான ரயில் சேவை நேர அட்டவணையில் இன்று (21) முதல் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதன்படி யாழ்தேவி ரயில் சேவை உட்பட ஏனைய ரயில் சேவைகளதும் ஆரம்ப நேரம் மாற்றப்பட்டுள்ளது என்று ரணில்வேத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பிற்பகல் 1.40 மணிக்கு காங்கேசந்துறையில் இருந்து கொழும்பு கோட்டை மற்றும் கல்கிஸ்சை வரை பயணித்த யாழ்தேவி ரயில் இன்று முதல் காலை 10 மணிக்குக் காங்கேசந்துறை நிலையத்தில் இருந்து புறப்பட்டது.

இதேவேளை, சனிக்கிழமை அதிகாலை 5.20 மணிக்கு கொழும்பு கோட்டையில் இருந்து காங்கசன்துறைவரை சேவையாற்றிய ரயிலின் நேரம் காலை 5.30 மணியாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பொல்கஹவெலயில் இருந்து மஹவ சந்திவரை காலை 5.30 க்கு செல்லும் தினசரி ரயிலின் நேரம் காலை 5.25 ஆக மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாகக் குருநாகலில் இருந்து காலை 8.55மணிக்கு மஹவ சந்தி வரை செல்லும் தினசரி ரயிலின் நேரம் காலை 9.15 மணியாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

### கொத்மலை வெத்தலாவ பிரதேசத்தில்

# நிலத்தடியில் மர்மச் சத்தம்: விசாரணைகளுக்கு ஏற்பாடு!

### நுவரெலியா மாவட்ட செயலாளர் தெரிவிப்பு

**(மஸ்கெலியா நிருபர்)**

நுவரெலியா பிரதேசத்தில் பழங் காலத்தில் இருந்தே அன்றாட பாவனைக்கு பயன்படுத்தப்பட்ட நீர் ஆதாரங்கள் திடீரென காணாமல் போனமை மற்றும் பூமிக்கு அடியில் இருந்து கேட்கும் மர்மமான சத்தம் தொடர்பில் அவசர ஆய்வு மற்றும் முறையான விசாரணை நடத்தப்படும் என்று நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலகொட தெரிவித்துள்ளார்.



கொத்மலை ஹதுனுவெவ வெத்தலாவ பிரதேசத்தின் நிலத்தடியில் எழுந்துள்ள அசாதாரண சத்தம் காரணமாக ஏற்பட்டுள்ள சிக்கல் நிலை குறித்து கருத்து தெரிவிக்கும் போதே மாவட்ட செயலாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மழை காலத்தில் பொது விளையாட்டு மைதானத்தின் உள் இருந்து மிக பயங்கரமான சத்தம் கேட்டுள்ளது.

இதனால் அவதியுறும் மக்களின் வேண்டுகோளுக்கு இணங்கக் கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தால் சம்பந்தப்பட்ட பகுதி ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது.

இந்த நிலையில், அங்கு ஆபத்தான அல்லது பேரிடர் சூழ்நிலை எதுவும் உறுதி செய்யப்படவில்லை. புவியியல் மற்றும் சுரங்க பணியகத்தால் சிறப்பு விசாரணை நடத்தப்பட உள்ளது என்று அவர் மேலும் கூறினார்.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## 'ஷொக்' அடிக்கும் கட்டண உயர்வு

மீண்டும் மின்கட்டணம் உயர்த்தப்படுகின்றது. இது இந்த ஆண்டில் மூன்றாவது மின்கட்டண உயர்வு.

இம்முறை மின்கட்டணம் சராசரியாக பதினெட்டு வீதம் உயர்கின்றது. உடனடியாக நேற்று முதல் இந்த கட்டண உயர்வு நடைமுறைக்கு வருகின்றது.

இதற்கான அனுமதியை இலங்கை மின்சார சபைக்கு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு வழங்கியிருக்கின்றது. அடுத்த வருடம் ஜூன் 30 ஆம் திகதி வரை - அதாவது அடுத்த எட்டு மாதங களுக்கு - இப்போது உயர்த்தப்படும் கட்டண அளவீடு தொடர வேண்டும் என்பது வழங்கப்பட்ட உத்தரவு.

ஆனால், இப்போது இடையில் திடுதிப்பென மின்கட்டண உயர்வு வந்தமை போல, அடுத்த ஜூனுக்கு இடையிலும் எத்தனை கட்டண உயர்வுகள் வருமோ தெரியாது. ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம். நீரேந்து பிரதேசங்களில் மழை குறைந்து, நீர்நிலைகள் வற்றியமையினால் நீர்மின் உற்பத்தி பெருமளவில் வீழ்ச்சி அடைந்தது. அதனால் பிற வழிகளில் மின் உற்பத்தி செய்ய வேண்டிய கட்டாயம் நேர்ந்தது. அதன் விளைவுதான் இந்தக் கட்டண உயர்வுக்கான கட்டாயம் என்று இலங்கை மின்சார சபை விளக்க மளித்திருந்தது.

ஆனால், வறட்சி முடிந்து, தாராளமாக மழை பெய்து, நீரேந்து மையங்கள் கணிசமான கொள்ள ளவு நீர்மட்டத்தை எட்டி, நிலைமை திருப்தி தரும் கட்டத்தை அடையும் போதுதான், பழைய வறட்சிக் கால பின்னடைவுக்கான கட்டண உயர்வு நடை முறைக்கு வந்திருக்கின்றது .

'வரப்புயர நீருயரும், நீருயர நெல்லுயரும், நெல்லுயர குடியுயரும், குடியுயர கோன் உயர்வான்' என்ற ஔவைப் பாட்டியின் முதுமொழி போல, மின்சாரக் கட்டணம் உயர, மக்களின் வாழ்க்கைச் செலவை உயர்த்தும் விதத்தில் எல்லாவற்றிலும் விலை உயர்வு தவிர்க்க முடியாததாக இருக்கும். பொருள் களின் விலை உயர்வும், சேவைகளின் கட்டண உயர்வும் நிச்சயம் தொடரும். அதில் சந்தேகமே இல்லை. ஏற்கனவே மின்கட்டண உயர்வு அறிவித் தல் வந்த கையோடு, அதன் காரணமாக பேக்கரி உற்பத்திப் பொருள்களின் விலைகள் அதிகரிக்கும் என்று அகில இலங்கை உணவக உரிமையாளர் சங்கம் தீர்மானித்து அறிவித்துள்ளது.

மத்திய கிழக்கில் யுத்தம் வெடித்துள்ள சூழலில் எரிபொருள் விலை அதிகரிப்பும் வரலாம் என்று அஞ்சப்படுகின்றது. அதுவும் வந்தால், மின்கட்டணம் இன்னொரு சுற்று உயரும். இரண்டும் சேர்ந்து இலங்கை மக்களின் வாழ்வில் மீண்டும் கொரோனா கால கொடூரத்தை ஏற்படுத்திவிடும். பாவம், இலங்கை மக்கள்...!

# செவ்வாய், வெள்ளிகளில் கூட்டங்களை நடத்துமாறு சுற்றறிக்கை வெளியீடு!




(அஸ்ஹர் ஆதம் )

அரச திணைக்கள அதிகாரிகளுக்கு நிகழ் நிலை மூலமாக கூட்டங்களை நடத்தும் போது செவ்வாய்க் கிழமை மற்றும் வெள்ளிக்கிழமைகளில் நடத்துமாறு பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் வலியுறுத்தி சுற்றறிக்கை ஒன்றை வெளி யிட்டுள்ளார்.

இது தொடர்பாக பொது நிர்வாக அமைச்சு வெளி யிட்டுள்ள சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது–

திங்கள் மற்றும் புதன் ஆகிய பொது மக்கள் தினங் களில் இவ்வாறான கூட்டங்களுக்கு மாவட்ட செயலா ளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் அழைக்கப் படுவதுடன் அதிகாரிகளும் அழைக்கப்படுகின்ற னர்.

இதனால் தாம் பெரும் சிரங்களை எதிரல் கொள் கின்றர் என்று பொது மக்கள் முறைப்பாடு செய்துள்ள னர்.

இத்தினங்களில் பொது மக்கள் தங்களது கடமை களையும் தேவைகளையும் நிறைவேற்றிக் கொள் வதில் மிகுந்த சிரமங்களை எதிர் நோக்குகின்றனர் என்று விசனம் தெரிவித்துள்ளனர்.

இவற்றைக் கருத்தில் கொண்டு இனிவரும் காலங் களில் இதனைத் தவிர்த்து செவ்வாய் மற்றும் வெள்ளிக் கிழமை ஆகிய இரு திங்களில் அதிகாரிகளுடனான நிகழ்நிலை கூட்டங்களை நடத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம்.–என்றுள்ளது.

பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர்.கே.டி.என்.ரஞ்சித் அசோக சகல அமைச்சுக் களின் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர் கள் மற்றும் திணைக்களத் தலைவர்களுக்கு இது தொடர்பில் அறிவுறுத்தியுள்ளார்.

# நவராத்திரி தின பரிசளிப்பு விழா

நீர்வேலி வடக்கு காளியம்மன் தேவஸ்தான நவ ராத்திரி தின பரிசளிப்பு விழா நிகழ்வு நாளை (22) ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

த.பிரணவன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ பீட பேராசிரியர் தி.வேல்நம்பியும் சிறப்பு விருந்தினராக அகில இலங்கை சைவப்புலவர் சங்கச் செயலாளர் சைவப் புலவர் செ.த.குமரனும் கலந்து கொள்வர்.

கௌரவ விருந்தினர்களாக நீர்வேலி றோ.க.த.க. பாட சாலை அதிபர் சி.தர்மரத்தினம்,நீர்வேலி காளிஅம்மன் தேவஸ்தானத் தலைவர் இ.இந்திரகுமார் ஆகியோரும் கலந்து கொள்வர்.



# ஏழைகளுக்கு உதவும் திட்டத்தில் 14 ஆவது வீடமைக்க அடிக்கல்!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

ஏழைகளுக்கும், உதவி தேவைப்படு வோருக்கும் உதவுவோம் காப்போம் அமைப்பால் 14 ஆவது வீட்டுக்கான அடிக்கல் நட்டு வைக்கப்பட்டுள்ளது.

புயல்காற்றால் முற்றிலும் வீடு சேத மாக்கப்பட்ட குடும்பம் ஒன்றுக்கு வீடு அமைப்பதற்கு இந்த அடிக்கல் நட்டு வைக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸ் நாட்டில் இயங்கும் அபிரா மன் உதவும் கரங்கள் அமைப்பானது காப்போம் அமைப்புடன் இணைந்து வீடு அமைத்துக் கொடுப்பதற்கு முன்வந் துள்ளன.

இந்த் நிகழ்வில் காப்போம் அமைப் பின் முக்கியஸ்தர்களும் அபிராமன் உதவும் கரங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

# கோறளைப்பற்றில் இரு வீடுகள் கையளிப்பு



(அ.அஸ்வர், நவாஸ்)

சர்வதேச வறுமை ஒழிப்பு தினத்தை முன்னிட்டு கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகப் பிரிவில் சமுர்த்தி திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட்டுள்ள “ஜெயவிமன” வீடமைப்பு திட்டத்தின் கீழ் இரண்டு வீடுகள் செவ்வாய்க் கிழமை (17)பயனாளிகளிடம் கையளிக் கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதி களாக மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் சீ.புவனேந்திரன் மற்றும் பிரதேச செயலாளர் எஸ்.எச்.முசம்மில் ஆகியோர் கலந்துகொண்டனர்.

சிறப்பு அதிதிகளாக மாவட்ட பதில் கணக்காளர் எஸ்.எம்.பசீர், மாவட்ட சிரேஷ்ட முகாமையாளர் மனோகிதராஜ், மாவட்ட சமூக அபிவிருத்தி முகாமையா ளர் ரீ.புவிதரன், கோறளைப்பற்று மத்தி தலைமைப்பீட சமுர்த்தி முகாமையா ளர் எஸ்.ஏ.எம்.பசீர், முகாமைத்துவப் பணிப்பாளர் எம்.எல்.ஏ.மஜீத், கல்குடா சக்காத் நிதிய பணிப்பாளர் சபை உறுப் பினர் எம்.ரீ.எம்.அஷ்ரப், சமூக அபி விருத்தி உத்தியோகத்தர் ஏ.எல். ஐயூப் கான், வங்கி கட்டுப்பாட்டு சபை தலை வர் ஏ.பி காதர் முகம்மட், சமுர்த்தி பிரிவு உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.





## சந்திப்பு...

(ஹஸ்பர்)

அமெரிக்க காட்டர் சென்றர் பிரதிநிதிகளுக்கும் இலங்கை தேசிய தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு (18) கொழும்பு கோல் பேஸ் விடுதியில் நடைபெற்றது.

சந்திப்பில் நடைபெற இருக்கும் தேர்தல்களின் போது தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகள் அதே போன்று வாக்காளர்களை அறிவூட்டக் கூடிய நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

சந்திப்பில் கபே அமைப்பு சார்பாக அதன் நிறைவேற்று பணிப்பாளர் மன்னாஸ் மக்கீன் மற்றும் சட்டத்துறை பணிப்பாளர் ஹரேந்ர பானகல மற்றும் காட்டர் சென்றர் பிரதிநிதிகளான சஹிரா சகீட், தாரா செரீப், மார்க் ஸ்டீவன், தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களான சீ.எம்.இ., பெப்ரல் ட்ரான்ஸ் பேரன்சி இன்டர் நஷனல், ஐரெக்ஸ் ஆகியவற்றை சேர்ந்தோரும் கலந்து கொண்டனர்.

## கிளங்கன் வைத்தியசாலை வீதியை திருத்தித் தருமாறு மக்கள் கோரிக்கை





(மஸ்கெலியா நிருபர்)

சாஞ்சிமலை போடேஸ் புளியாவத்தை, நியூட்டன் போன்ற கிராமங்கள் ஊடாக கிளங்கன் வைத்தியசாலைக்கு செல்லும் சுமார் 3 கிலோ மீற்றர் வீதி, புனரமைக்கப்படாமல் குன்றும் குழியுமாக காணப்படுகின்றது.

வைத்தியசாலைக்கு விரைவில் செல்லக் கூடிய வீதியாக இது காணப்படுகின்றது. இவ்வீதி ஊடாக அழைத்து செல்லப்பட்ட சில கர்ப்பிணி தாய்மாருக்கு வழியிலேயே பிரசவம் நடந்துள்ளது சில நோயாளிகள் உயிரிழந்தும் உள்ளனர்.

இந்த நிலையில் இந்த வீதியை புனரமைத்து தருமாறு அரசியல்வாதிகளிடம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர் எனினும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

## ஆயுள்வேத வைத்தியசாலை திறப்பு



(அ.அஸ்வர்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கொக்கட்டிச்சோலையில் புதிய ஆயுள்வேத வைத்தியசாலை பிரதேச மக்களின் தேவை கருதி அண்மையில் (19) திறந்து வைக்கப்பட்டது.

கொக்கட்டிச்சோலை மாவடி முன்மாரி பகுதியில்வாரத்துக்குஒருமுறைசிகிச்சை வழங்கும் நோக்கில் பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையால் இது திறந்துவைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ்.சுகுணன் உட்பட சுகாதாரத் துறை அதிகாரிகள், பிரதேச மக்கள் எனப் பலரும் பங்கேற்றனர்.

மாவடிமுன்மாரி கிராமிய சுகாதார நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள இவ்வைத்தியசாலை, இப்பகுதி மக்களின் சுகாதாரத் தேவைக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

# நாமகள் நகர் உலா...!

(வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரியின் வருடாந்த நவராத்திரி விழாவை முன்னிட்டு நாமகள் நகர் உலா இன்று (21) சனிக்கிழமை நடைபெற்றது.







# நீதியையும் தர்மத்தையும் நிலை நாட்டும் புதிய பாதுகாப்பு ஒழுங்கு அவசியமானது!

## பலஸ்தீன மக்களுக்கு விடுதலை அவசியம் என்கிறார் ஹரீஸ் எம்.பி.



(நூருல் ஹுதா உமர்)

அமெரிக்காவுடைய நீதியும், தர்மமும், வஞ்சகமானது. அது இஸ்லாமிய மக்களுக்கு வேறு, உலகத்தில் இருக்கின்ற ஏனைய நாடுகளுக்கு வேறு என்பதை மீண்டும் ஒருமுறை நிரூபித்து இருக்கின்றது. எனவே தான் உலக பாதுகாப்பு சமன்பாட்டில் இன்று ஒரு தேக்கம் ஏற்படுத்தியிருகின்றது.

இவ்வளவு காலமும் நாங்கள் நம்பி கொண்டிருந்தோம் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை நீதியையும், தர்மத்தையும் ஏற்படுத்தும் என்று . ஆனால் இன்று அது ஒரு வெற்றுச் சபையாகி இஸ்லாமிய மக்களுக்கும், பலஸ்தீன மக்களுக்கு எந்த நீதி நியாயத்தையும் வழங்காத ஒரு சபையாக மாறியுள்ளது.

இந்த நிலையில் உலக இஸ்லாமிய நாடுகளின் அமையம் சவுதியில் கூடி இருக்கின்றது.

திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் இராஜாங்க அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவருமான எச்.எம்.எம். ஹரீஸ் இவ்வாறு தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதமொன்றில் உரையாற்றிய போது அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து தெரிவித்துள்ளவை வருமாறு–

பலஸ்தீன–இஸ்ரேல் பிரச்சினை என்பது தற்செயலான இரு நாடுகளுக்கும் இடையிலான பிரச்சினையாகப் பார்க்கவில்லை.

உலகத்தில் இருக்கும் யூத மக்கள் 1895 ஆம் ஆண்டு சியோனிஸ்ட் என்ற ஒரு அமைப்பை உருவாக்கி ஒரு நாட்டை உருவாக்க வேண்டும் என்ற ஒரு திட்டத்தை வகுத்தார்கள். இதற்கமைய முதலாவது உலக யுத்தத்துக்கு முன்பு உலக முஸ்லிம்களை ஆட்சி செய்த துருக்கிய சாம்ராச்சியம் அன்று பலவீனப்படுத்தப்பட்ட பொழுது அவர்கள் பலஸ்தீன நாட்டை ஆக்கிரமித்து யூத தேசம் ஒன்றை உருவாக்க வேண்டும் என்பதற்காக 1917 ஆம்,1918 ஆம் காலப் பகுதியில் அங்கு பலஸ்–தீன முஸ்லீம் மக்கள் இருக்கும் அந்த தேசத்தில் யூத மக்களை குடியேற்றி ஆக்கிரமிப்பு நடவடிக்கையை மேற்குலகம் ஆரம்பித்தது.

ஹிட்லருடைய இனச் சுத்திகரிப்பு யுத்தம் நடைபெற்ற பொழுது ஜேர்மனியில் இருந்த யூத மக்களைக் கப்பல்களில் பலஸ்தீன துறை முகத்துக்கு அனுப்பினர். அங்கு 1945 காலப் பகுதியில் இஸ்ரேல் என்ற ஒரு தேசத்தை உருவாக்கி வரலாற்று நீதியாகத் தேசமாக, நாடாக இருந்த பலஸ்தீனத்தை அந்த மக்களை அகதிகளாக்கிய பெரும் கொடூரம் இந்த உலகத்தில் நடைபெற்றதை நாங்கள் யாரும் மறுக்க முடியாது.

அவ்வாறான ஒரு அநீதியை ஒரு கொடுமையைச் செய்த பொழுது அந்த மக்கள் யூத மக்கள் குடியேறுவதற்கு பக்கத்தில் இருந்த ஐரோப்பிய நாடுகள் பிரிட்டன் போன்ற நாடுகள் இருக்கத்தக்கதாக வேண்டுமென்றே மத்திய கிழக்கில் முஸ்லீம் நாடுகளை அச்சுறுத்துவதற்காக – மத்திய கிழக்கில் அமைதியின்மையை கொண்டு வருவதற்காக அன்று பலாத்காரமான முறையில் இஸ்ரேல் என்ற தேசம் உருவாக்கப்பட்டது.

இஸ்ரேல் என்ற அந்த நாடு தனக்கு அபாயம் அளித்த பலஸ்தீனை கடந்த 6 ஆம் திகதி மட்டுமல்ல கடந்த 80 வருட காலமாகக் காலத்துக்குக் காலம் யுத்தம் செய்து அவர்களுக்கு எதிராக வன்முறைகளை தூண்டி அந்த மக்களை அழித்துக் கொண்டிருக்கிறது. இதை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது.

கடந்த 6 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட அந்த யுத்தத்தில் உண்மையில் இரு பக்கமும் பொது மக்கள் கொல்லப்பட்டதை நாங்கள் கவலையோடு பார்க்கின்றோம். அதேநேரம் மிக கொடூரமான முறையில் காஸாவில் இருந்த ஒரு ஆஸ்பத்திரி மீது தாக்குதல் நடத்தி பெரும் ஒரு யுத்தக் குற்றம் ஒன்று இழைக்கப்பட்டுள்ளது. இந்த ஒரு சூழ்நிலையில் இன்று உலக நாடுகளின் புலனாய்வு பிரிவினர் காஸா ஆஸ்பத்திரி தாக்குதலுக்கு இஸ்ரேல் என்ற அவர்களுடைய இராணுவப்படை காரணமாக இருக்கின்றது என்று கூறியும் கூட உலகத்தை வழிநடத்தி கொண்டு இருக்கின்ற ஐரோப்பிய, அமெரிக்க நாடுகள் வேடிக்கை பார்த்து கொண்டிருக்கின்றன.

உக்ரைன், ரஸ்யாபோர்வந்தபொழுது அமெரிக்க ஐரோப்பிய நாடுகள் உக்ரைனில் பொது மக்கள் கொல்லப்பட்டுக் கொண்டுருக்கின்றார்கள், அநீதி அங்கே நடைபெறுகின்றது என்பதற்காக ரஸ்யா மீது பல பொருளாராத தடைகளை மேற்கொண்டார்கள். பாதுகாப்பு சபையில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. ஐக்கிய நாடுகள் சபையில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. உலக நாடுகள் பல கண்டன தீர்மானங்களை நிறைவேற்றியன. உலக குற்றவியல் நீதிமன்றம் ரஷ்ய அதிபருக்கு எதிராகப் பிரேரணையைச் சமர்ப்பித்தது. இவ்வாறு ரஷ்ய, உக்ரைன் போரில் உலக நாடுகளின் ஒரு பார்வை வேறு விதமாகவும் அதே நேரம் இஸ்ரேல் பலஸ்தீன யுத்தத்தில் உலக நாடுகளுடைய பார்வை வேறு விதமாகவும் இருப்பது மிகவும் வேதனையாக இருக்கிறது.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் இஸ்ரேல் சென்று, இந்த உலகு எதிர்பார்த்தது போன்று காஸா முனையை நோக்கி இஸ்ரேல் தாக்குதலுக்கு இப்பொழுது தயாராகிக்கொண்டுருப்பதை தடுத்து ஒரு யுத்த நிறுத்தத்தை மேற்கொள்வார், உலகத்தில் ஒரு நீதியையும் தர்மத்தையும் ஏற்படுத்துவார் என்ற சிறிதளவு நம்பிக்கை இருந்தது.

இன்று அவர்களுடைய வெற்று வார்த்தைகள் தவிடு பொடியாகிவிட்டன. அமெரிக்காவுடைய நீதியும், தர்மமும், வஞ்சனமானது. அது இஸ்லாமிய மக்களுக்கு வேறு, (11ஆம் பக்கம் பார்க்க)





# நாவிதன்வெளி பிரதேச சபையால் முஸ்லிம் பிரதேசம் புறக்கணிப்பு!

## நீதி கேட்டு உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் மகஜர் கையளிப்பு

**(நூருல் ஹுதா உமர்)**

நாவிதன்வெளி பிரதேச சபையின் ஊடாக மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி வேலைத் திட்டங்களின் போதும், ஏனைய பங்கீடுகளின் போதும் முஸ்லிம் பிரிவுகள் தொடர்ச்சியாகப் புறக்கணிக்கப்பட்டு வருகின்றன. இது மிகுந்த கவலையைத் தருகிறது.

விகிதாசார அடிப்படையில் எமக்கு வழங்கப்படவேண்டிய வேலைத் திட்டங்கள் மற்றும் பங்கீடுகள் உரிய முறைப்படி எமது மக்களுக்கும் வழங்கப்பட வேண்டும் .

இவ்வாறு நாவிதன்வெளி பிரதேச சமூக ஆர்வலர்கள், பொது அமைப்புக்கள் இணைந்து அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் மகஜர் மூலம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அந்த மகஜரில் தெரிவிக்கப் பட்டுள்ளவை வருமாறு–

நாவிதன்வெளி பிரதேசத்தில் 20 கிராம சேவகர் பிரிவுகள் காணப்படுகின்றன. அதில் 8 கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கியவாறு முஸ்லீம்கள் 34.64 சதவீதம் வசித்து வருகின்றனர்.

ஆனாலும் நாவிதன்வெளி பிரதேச சபையூடாக மேற்கொள்ளப்பட்ட சில வேலைத் திட்டங்கள் பொருத்தமற்ற இடங்களில் முன்னெடுக்கப்படுகின்றன. இன்று அவை பாவனையற்று காணப்படுகின்றன. உதாரணமாக மத்திய முகாம் சந்தைத் தொகுதி, சவளக்கடை சந்தைத் தொகுதி, சவளக்கடையில் அமைக்கப்பட்டுள்ள விளையாட்டு மைதானம் போன்றவற்றை குறிப்பிடலாம்.

அதுமாத்திரமின்றிக் கடந்த காலங்களில் முஸ்லிம் கிராம சேவகர் பிரிவுகள் புறக்கணிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்ட வேலைத் திட்டங்களில் சிலவற்றை இங்கு சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது.

அதில், 5.2 கிலோ மீற்றர் தொலைவுக்கு அண்ணாமலை பிராந்தியத்துக்கு நீர் இணைப்பு வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது. இவ் வேலைத் திட்டத்தை மேற்கொள்வதற்கு கலந்துரையாடிய போது, இதன் இரண்டாம் கட்ட வேலைத்திட்டம் முஸ்லிம் பிரிவில் மேற்கொள்ளப்படும் என்று உடன்பாடு காணப்பட்டது. ஆனால் இரண்டாம் கட்ட வேலைத் திட்டம் உடன்பாட்டை மீறி சவளக்கடையில் இடம்பெற்றுள்ளது.

சவளக்கடை பொது விளையாட்டு மைதானம், சவளக்கடை பொது சந்தைத் தொகுதி, மத்திய முகாம் பொது சந்தைத் தொகுதி போன்ற வேலைத் திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இவ்வருடத்துக்கான வேலைத் திட்டங்களிலும் முஸ்லிம் பிரதேசங்களைப் புறக்கணித்து தமிழ் பிரதேசங்களில் செயற்படுத்த திட்டமிட்டுள்ளதாக அறிகின்றோம்.

தயவு செய்து இவ்வருடத்துக்கான வேலைத் திட்டங்களில் நாவிதன்வெளி முஸ்லிம் பிரதேசங்கள் புறக்கணிக்கப் படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். –என்றுள்ளது.

# நீதியையும் தர்மத்தையும்

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

உலகத்தில் இருக்கின்ற இஸ்லாமிய நாடுகளுக்கு வேறு, என்பதை மீண்டும் ஒருமுறை நிரூபித்து இருக்கின்றது.

எனவேதான் உலக பாதுகாப்பு சமன்பாட்டில் இன்று ஒரு தேக்கம் ஏற்படுத்தியிருகின்றது. இவ்வளவு காலமும் நாங்கள் நம்பி கொண்டிருந்தோம். ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபை நீதியையும் தர்மத்தையும் ஏற்படுத்தும் என்று. ஆனால் இன்று அது ஒரு வெற்றுச் சபையாகி, அது இஸ்லாமிய மக்களுக்கு பலஸ்தீன மக்களுக்கு எந்த நீதி நியாயத்தையும் வழங்காத ஒரு சபையாக மாறி இருக்கின்றது. இந்தத் தருவாயில் உலக இஸ்லாமிய நாடுகளின் அமையம் சவுதியில் கூடி இருக்கின்றது.

நாங்கள் வேண்டி நிற்பது அமெரிக்க தலைமையிலான நேட்டோ ஒரு பாதுகாப்பு அரணை அந்தந்த நாடுகளுக்கு ஏற்படுத்தி இருப்பது போன்று ஆசிய நாட்டில், மத்திய கிழக்கில் ஆபிரிக்க நாடுகளுக்கு என்று ஒரு புதிய பாதுகாப்பு ஒழுங்கு உலகில் ஏற்படுத்த பட வேண்டும்.

இதற்கு இந்தியா , சீனா, ரஸ்யா, மத்திய கிழக்கு நாடுகள் நேட்டோ போன்று ஒரு பாதுகாப்பு அமயத்தை உருவாக்கி உலகத்தில் நீதியையும் தர்மத்தையும் ஏற்படுத்தும் ஒரு புதிய பாதுகாப்பு ஒழுங்கினை இந்த உலகத்தில் ஏற்படுத்துவதற்கு முன்வர வேண்டும்.

அப்போது தான் மூன்றாம் உலகத்தில் வாழ்கின்ற மக்களுக்கு ஒரு நிம்மதியான நியாயத்தை எதிர்பார்க்க முடியும்.

இன்று புதிய ஆயுத நவீன ஆயுதங்களை கொண்டு இன்று ஒரு பொலிஸ்காரன் போன்று காட்டுமிராண்டிதனம் காட்டுகின்ற இந்த இஸ்ரலை இந்த சபையில் நான் வன்மையாக கண்டிக்கின்றேன்.

அதே நேரம் சுதந்திர பலஸ்தீன ராச்சியம் ஏற்படுத்துவதற்கு இந்தியா வெளியுறவுத்துறை அறிவித்திருக்கின்றது. அதுபோன்று ரஸ்யா அறிவித்திருக்கின்றது, சீனா அறிவித்திருக்கின்றது. அதே போன்று முஸ்லிம் உலக நாடுகள் அனைத்தும் அறிவித்திருக்கின்றன. இனியும் தாமதிக்காமல் அமைதியும் ஒழுங்கும் உலகம் அமைதியாகவும் சமாதானமாகவும் வாழ வேண்டும் என்றால் பலஸ்தீன மக்களுக்கு அல் அக்ஸா எங்களுடைய புனித தளம் உள்ளடங்கலான ஜெருஸலேம் நகரத்திலுடனான புதிய பலஸ்தீன ராச்சியம் உருவாக்கப்பட வேண்டும்.

இந்த உலகில் கடந்த 80 வருட காலமாக அநியாயமாக பாதிக்கப்பட்டு இருக்கின்ற பலஸ்தீன குழந்தைகள் அவர்களுடைய பெற்றோர்கள் மரணித்தவர்களுடைய ஆத்ம திருப்தி அடைவதற்காக உலக இந்த புதிய ஒழுங்கில் உலக நாடுகள் ஐக்கிய நாடுகள் அமையம் புதிய பலஸ்தீனராச்சியத்தை உடனடியாக ஏற்படுத்துவதக்கான காஸா முனைத் தாக்குதலை நிறுத்துவதற்கு இஸ்ரேலை வேண்டிக் கொள்ள வேண்டும்.– என்றார்



# சமூக நல்லிணக்கத்தை வலியுறுத்தி 200 மரக் கன்றுகளை நடும் திட்டம்!

(நூருல் ஹுதா உமர்)

இயற்கையால் ஆசீர்வதிக்கப்பட்ட அழகிய இலங்கை தேசத்தில் மரங்களை வளர்ப்பதன் மூலம் காலநிலையை சீராக பேண முடியும். இயற்கை வளங்களை அழிப்பதன் மூலம் நாடு மட்டுமல்ல நாமும் சீரழிந்துவிடுவோம். இறைவனின் படைப்பில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு அழகும் பயனும் என்றால் மரம் அதன் உச்ச வடிவம். மரங்களை வெட்டுவதால் எமது எதிர்காலத்தை நாமே பழுதாக்கி கொள்வதற்கு ஒப்பானதாகும் என்று இலங்கை அடிப்படை மனித உரிமைகள் அமைப்பின் கிழக்கு மாகாண பணிப்பாளர் எம்.ஏ. நளீர் தெரிவித்தார்.

இயற்கையை நேசித்து சமூக நல்லிணக்கத்தை கட்டியெழுப்பும் நோக்கில் அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தமயந்த விஜயஸ்ரீ எண்ணத்தின் ஏற்பாடு செய்யப்பட்ட மரநடுகை நிகழ்வு இன்று (21) மத்திய முகாம் நகர லும்பினி பௌத்த விகாரையின் விகாராதிபதி அம்பிட்டியே சுமித் தேரர் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

200 மரக்கன்றுகளை நடும் வேலைத் திட்டத்தை தொடக்கிவைக்கும் வகையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், இலங்கை அடிப்படை மனித உரிமைகள் அமைப்பின் கிழக்கு மாகாண பணிப்பாளர் எம்.ஏ. நளீர், மத்திய முகாம் பொலிஸ் நிலைய சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் எம். கபூர், மத்திய முகாம் பொலிஸ் பிரிவின் சிவில் பாதுகாப்பு குழு உறுப்பினர் எம்.எச். லத்திப் ஹாஜி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# திட்டமிடல் செயலமர்வும் சான்றிதழ்கள் வழங்கலும்





(சியாத்.எம்.இஸ்மாயில் )

சுகாதார துறை சார்ந்தோருக்கான திட்டமிடல் தொடர்பான செயலமர்வும் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வும் அக்கரைப்பற்று ஆதார வைத்திய சாலைக் கேட்போர் கூடத்தில் இரண்டு நாட்கள் (13,14) இடம்பெற்றன.

அக்கரைப்பற்று ஆதார வைத்திய சாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ரீ.எஸ்.ஆர்.ரீ.ஆர்.றஜாப் தலைமையில் இச்செயலமர்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வில் சுகாதார அமைச்சின் திட்டமிடல் பொது உதவி பணிப்பாளர் டாக்டர் எஸ். ஸ்ரீதரன் பிரதம வளவாளராக கலந்து கொண்டு விரிவுரைகளை வழங்கினார்.

இந்நிகழ்வில் கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஐ.எல்.எம். றிபாஸ், பொது சத்திர சிகிச்சை நிபுணர்களான டாக்டர் றிப்ஷான் ஜெமீல், டாக்டர் நிமேஷா, வைத்திய நிபுணர்கள், பொறுப்பு வைத்திய அதிகாரிகள், வைத்திய சாலையின் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.


கல்முனைப் பிராந்தியத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட அனைத்து தர சுகாதார பணியாளர்களும் கலந்து கொண்டனர்.

தலைமைத்துவம், திட்டமிடல், செயல்திறன், பிரச்சினை அடையாளம் காணல், தர்க்க கட்டமைப்பு, மனோபாவம், நோயாளர்களின் பாதுகாப்பு, உற்பத்தித்திறன், அபிவிருத்தி கையாள்கை கோட்பாட்டு முறைமைகள் உள்ளிட்ட பல்வேறு தலைப்புக்களில் குழுக்களாக பிரிக்கப்பட்டு விரிவுரைகள் வழங்கப்பட்டன.

இந்தப் பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்ட 85 பேருக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

# ‘இந்தியாவின் முடிவு ஏற்புடையது அல்ல’

# கனடா தூதரக அதிகாரிகள் விவகாரத்தில் அமெரிக்கா, பிரித்தானியா வருத்தம்!



கனடா இந்தியாவில் உள்ள தனது தூதர அதிகாரிகளைத் திரும்ப அழைத்துக் கொண்டதற்கு அமெரிக்காவும், பிரித்தானியாவும் வருத்தம் தெரிவித்துள்ளன.

இந்தியாவில் உள்ள கனடா தூதர்களின் எண்ணிக்கையை குறைக்கக் கூடாது என்றும் வலியுறுத்தியுள்ளன.

காலிஸ்தான் குழு தலைவர் கொல்லப்பட்ட விவகாரத்தில் இந்தியாவுக்கும் கனடாவுக்கும் இடையில் சர்ச்சை நீடிக்கின்றது.

இந்த நிலையில், இந்தியாவில் பணியாற்றி வந்த 41 தூதரக அதிகாரிகளை கனடா திரும்பி அழைத்தது. இந்தியா விதித்த காலக்கெடு முடிவடைந்ததையடுத்து, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதுகுறித்து அமெரிக்காவின் வெளிவிவகார செய்தித் தொடர்பாளர் மேத்திவ் மில்லர் கூறுகையில், இந்தியாவில் உள்ள தூதரக அதிகாரிகளின் எண்ணிக்கையைக் குறைத்துக் கொள்ளும் இந்தியாவின் வலியுறுத்தலின் படி, கனடா தனது 41 தூதரக அதிகாரிகளை மீள அழைத்துள்ளமை எங்களுக்கு கவலையளிக்கிறது.

சிக்கல்களை பேசித் தீர்த்துக்கொள்வதற்கு களத்தில் தூதரக அதிகாரிகள் இருப்பது மிகவும் அவசியம். இந்தியாவில் உள்ள கனடா தூதரக அதிகாரிகளின் எண்ணிக்கையை குறைக்க வலியுறுத்த வேண்டாம் என்றும் கனடாவின் விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்கும்படியும் இந்தியாவை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

கனடாவின் தூதரக பணிகளுக்காக அங்கீகரிக்கப்பட்டவர்களின் சலுகைகள் மற்றும் விலக்குகள் உட்பட, 1961 ஆம் ஆண்டு வியன்னா மாநாட்டின் ஒப்பந்தத்தின் இராஜதந்திர உறவுகளுக்கான தனது கடமையை இந்தியா நிறைவேற்றும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம் என்று தெரிவித்துள்ளார்.

மேலும், காலிஸ்தான் குழு தலைவர் கொலை வழக்கில் கனடாவின் குற்றச்சாட்டை அமெரிக்கா தீவிரமாக எடுத்துக் கொள்கிறது எனவும் அந்த விசாரணைக்கு ஒத்துழைக்கும் படி பிரித்தானியாவுடன் இணைந்து வலியுறுத்துகிறோம் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இந்த விவாகாரம் குறித்து பிரித்தானியா வெளிவிவகார அலுவலக செய்தித் தொடர்பாளர் கூறுகையில், கனடா தூதரக அதிகரிகளின் எண்ணிக்கையை குறைக்கக்கோரும் இந்தியாவின் முடிவு எங்களுக்கு ஏற்புடையது அல்ல. தூதரக அதிகாரிகளின் பாதுகாப்பு மற்றும் சலுகைகளை விலக்கிக்கொள்வது வியன்னா மாநாட்டு கொள்கைகள் மற்றும் செயல்பாடுகளுடன் ஒத்துப்போகவில்லை என்று தெரிவித்துள்ளது.

இதனிடையே, இந்த விவகாரத்தில் இந்தியாவுடனான உறவில் விரிசல் ஏற்பட அமெரிக்காவும், பிரித்தானியாவும் விரும்பாது. ஆசியாவில் உள்ள அவர்களின் எதிரியான சீனாவை எதிர்கொள்ள அவர்கள் இந்தியாவுடன் சுமூகமான போக்கினை கடைபிடிப்பது அவசியம் என அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# சமூக நீதி மற்றும் சமத்துவத்தை நிலைநாட்ட சாதிவாரி கணக்கெடுப்பை நடத்த வேண்டும்!

## - பிரதமருக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம்



இந்தியாவில் சமூக நீதி மற்றும் சமத்துவத்தை நிலைநாட்டுவதற்கு, சமமான மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சியை உறுதி செய்ய தேசிய மக்கள் தொகை கணக்கெடுப்புடன் சாதிவாரியான கணக்கெடுப்பினை இணைத்து நடத்திட வேண்டும் என்பதை வலியுறுத்தி பிரதமர் மோடிக்கு தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இதுதொடர்பாக தமிழக அரசு விடுத்துள்ள செய்திக்குறிப்பில்,

இந்தியாவில் சமூக நீதியை நிலைநாட்டி, வளர்ச்சியின் பலன்களை மிகவும் பாதிக்கப்படக்கூடிய பிரிவினருக்குக் கொண்டு செல்லவேண்டும். இதற்காக வலிமையான, அனைவரையும் உள்ளடக்கிய இந்தியாவை உருவாக்குவதற்கும் ஏதுவாக, தேசிய மக்கள் தொகை கணக்கெடுப்புடன், விரிவானதொரு சாதிவாரிக் கணக்கெடுப்பை இணைத்து நடத்துவதற்கான ஏற்பாடுகளை மத்திய அரசு உடனடியாக ஆரம்பிக்க வேண்டும்.

2021 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு நடைபெறவில்லை. இந்த நிலையில், வரவிருக்கக்கூடிய தேசிய மக்கள் தொகை கணக்கெடுப்பில், சாதிவாரியான கணக்கெடுப்பினை இணைத்து நடத்திட வேண்டும்.

மாநில அளவில் இதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு இருந்தாலும், இந்தியாவின் சட்டப்பூர்வ மக்கள்தொகை கணக்கெடுப்பு, முக்கியமான சாதி தொடர்பான தரவு உள்ளீடுகளுடன் மேற்கொள்ளப்பட்டால் மட்டுமே, சமூக நீதி, சமத்துவம் போன்றவற்றை நிலைநாட்ட இயலும். ஷ

அதேபோல், சமமான மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சியை உறுதி செய்திட இயலும் என்று குறிப்பிட்டுள்ளார்.

# லெபனான் எல்லைப் பகுதிகளில் தீவிரம் யுத்தம்: 20 ஆயிரம் இஸ்ரேலியர்களை வெளியேற்ற முடிவு



லெபனான் எல்லையை அண்மித்த இஸ்ரேல் பகுதிகளில் வசிக்கும் 20 ஆயிரம் பேரை வெளியேற்ற அந்த நாட்டு அரசு முடிவு செய்துள்ளது.

இஸ்ரேல் இராணுவம், ஹமாஸ் தீவிரவாதிகளுக்கு இடையிலான போர் நேற்று 14 ஆவது நாளாக நீடித்தது. பாலஸ்தீனத்தின் காசாவில் சுமார் 100 இற்கும் மேற்பட்ட இடங்களை குறிவைத்து இஸ்ரேல் போர் விமானங்கள் தாக்குதல் நடத்தின. இதில் ஹமாஸின் கடற்படை பிரிவை சேர்ந்த மூத்த கமாண்டர் ஷாலாபி கொல்லப்பட்டார்.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு காசா எல்லைப் பகுதியில் உள்ள கோலானிக்கு சென்று வீரர்களை ஊக்கப்படுத்தினார். இஸ்ரேல் இராணுவ அமைச்சர் யோவா கேலான்ட், காசா எல்லைப் பகுதிக்கு சென்று இராணுவ வீரர்களுடன் கலந்துரையாடினார்.

இதன்போது அவர் கூறும்போது, ஹமாஸ் தீவிரவாதிகளுக்கு எதிரான போர் 3 கட்டங்களாக நடைபெறும். முதல் கட்டத்தில் ஹமாஸ் தீவிரவாதிகள் மீது வான்வழி தாக்குதல் நடத்தப்படும். 2 ஆவது கட்டமாக காசாவுக்குள் நுழைந்து தரைவழி தாக்குதல் நடத்தப்படும். போரில் வெற்றி பெற்ற பின்னர் 3 ஆவது கட்டமாக காசாவில் புதிய பாதுகாப்பு அமைப்பு உருவாக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து இஸ்ரேல் இராணுவ வட்டாரங்கள் கூறும்போது, காசாவில் தரைவழி தாக்குதலுக்கு தயாராக உள் ஆளோம். இராணுவ தலைமை அனுமதி கிடைத்தவுடன் காசாவுக்குள் நுழைவோம் என்று தெரிவித்துள்ளன.

காசா மக்களுக்கு ஆதரவாக லெபனான் நாட்டை சேர்ந்த ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் இஸ்ரேலின் வடக்கு எல்லைப் பகுதிகளை குறிவைத்து நேற்று ஏவுகணை தாக்குதல் நடத்தின. இதில் இஸ்ரேலிய வீரர்கள் சிலர் காய மடைந்தனர்.

இதற்கு பதிலடியாக இஸ்ரேல் இராணுவம் லெபனான் எல்லைகளை குறிவைத்து அதிநவீன ஏவுகணைகளை வீசின. மேலும் ட்ரோன் கள் மூலமும் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் சிலர் உயிரிழந்தனர். இரு தரப்புக்கும் இடையே யுத்தம் தீவிரமடைந்து வருகிறது.

ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் தாக்கு தலால் லெபனான் எல்லையில் இருந்து சுமார் 2 கிலோ மீற்றர் தொலை வுக்குள் வசிக்கும் இஸ்ரேலிய மக்கள் ஏற்கெனவே வெளியேற்றப்பட்டு உள்ளனர்.

இந்த சூழலில் லெபனான் எல் லையை அண்மித்த பகுதிகளில் இருந்து மேலும் 20 ஆயிரம் பேரை வெளியேற்ற இஸ்ரேல் அரசு முடிவு செய்துள்ளது.

ஏமன் நாட்டில் செயல்படும் ஹவுத்தி கிளர்ச்சிப் படைகளுக்கு ஈரான் இரா ணுவம் ஆதரவு அளித்து வருகிறது.

இந்த சூழலில் காசா மக்களுக்கு ஆதரவாக ஹவுத்தி கிளர்ச்சி படை வீரர்கள், இஸ்ரேல் பகுதிகளை குறி வைத்து ஏராளமான ஏவுகணைகளை வீசினர். இஸ்ரேல் கடல்பகுதியில் முகாமிட்டிருக்கும் அமெரிக்க போர்க் கப்பல், இந்த ஏவுகணைகளை நடுவா னில் தாக்கி அழித்தன.

இதுகுறித்து அமெரிக்க இராணுவ தலைமையகமான பென்டகன் கூறும் போது, ஹவுத்தி கிளர்ச்சிப்படையின் ஏவுகணைகள், ஏராளமான ட்ரோன்களை நடுவானில் தாக்கி அழித்தோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்க பணயக் கைதிகளை விடுவித்தது ஹமாஸ்!



இரண்டு அமெரிக்க பிணைக் கைதிகளை ஹமாஸ் அமைப்பு விடுவித் துள்ளது என இஸ்ரேல் பாதுகாப்பு படை உறுதி செய்துள்ளது.

கடந்த 7 ஆம் திகதி ஏராளமான இஸ்ரேலியர்கள் மற்றும் வெளிநாட்டவரை ஹமாஸ் தீவிரவாதிகள் சிறைபிடித்து சென்றனர்.

இஸ்ரேல் மீது நடத்திய திடீர் தாக்கு தலை தொடர்ந்து அவர்கள் காசா பகுதியில் ஹமாஸ் அமைப்பினரால் சிறை வைக்கப்பட்டிருந்தனர். இந்த சூழலில் பணயக் கைதிகளில் சிலர் உயிரிழந்தனர். நூற்றுக்கணக்கானோரை இஸ்ரேல் மீட்டது. இந்த நிலையில் அமெரிக்காவை சேர்ந்த தாய் மற்றும் மகளை ஹமாஸ் விடுவித்துள்ளது.

சிகாகோவை சேர்ந்த ஜூடித் டாய் ரானன் மற்றும் அவரது மகள் நடாலி ரானன் ஆகியோர் தற்போது இஸ்ரேல் பாதுகாப்பு படையின் வசம் ஒப்படைக்கப் பட்டுள்ளனர். தெற்கு இஸ்ரேல் பகுதிக்கு அவர்கள் இருவரும் வந்திருந்த போது ஹமாஸ் அமைப்பினரிடம் அவர்கள் சிக்கியுள்ளனர் என அவர்களின் குடும்பத்தார் தெரிவித்திருந்தனர்.

மனிதத்துவ அடிப்படையில் அவர்கள் இருவரையும் ஹமாஸ் விடுவித்துள்ளது.